கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள், செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.26/2024
இன்
அசல் வழக்கு எண்.51/2014
* * * *

1. முத்தையா
2. முத்துராமலிங்கம்
3. பாண்டியம்மாள்
4. முத்துசெல்வி
5. சத்யா
6. தேன்மொழி ... மனுதாரர்கள்/ 8 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள்

/எதிர்/

1. சரவணக்குமார் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. கருப்பாயி அம்மாள் (இறப்பு)
3. சார்பதிவாளர்,
திருப்பரங்குன்றம்.
4. தமிழ்நாடு அரசுக்காக,
அதன் மாவட்ட ஆட்சித்தலைவர்
மூலமாக, ... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகள்
5. சிவகாமி
6. ராஜேஸ்வரி

7. ராஜ்குமார்
8. வேலாயுதம் ... 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 7 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 20.04.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/8 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கணபதி அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மகாராஜன் அவர்கள் ஆஜராகியும், 3,4,8 எதிர்மனுதாரர்கள்/2, 3, 7 பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கு எண்.51/2014ல் 8 முதல் 13 பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டி

கட்டளை 1 விதி 10(2) மற்றும் விதி 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

மனுதாரர்கள்/8 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள் தரப்பு மனு மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் தங்களது மனுவினை நிரூபணம் செய்யும்பொருட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

1.1) அசல் வழக்கானது வழக்குச்சொத்தை பொறுத்து 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 28.03.2011ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தினை இரத்து செய்த கடந்த 26.12.2013ம் தேதியிட்ட ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக்கோரி வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) இம்மனுவானது மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கு எண்.51/2014ல் 8 முதல் 13 பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டி

கட்டளை 1 விதி 10(2) மற்றும் விதி 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில், அசல் வழக்கானது 1ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் என்று விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்நிர் மனுதாரர்/உத்தேச பிரதிவாதியானவர் அசல் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் ஆவார் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே இந்நிர் மனுதாரர்/உத்தேச பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இந்நிர் இடையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) தீர்வு:—</u>**

2.1) அசல் வழக்கானது கடந்த 2014ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.51/2014—ல் இந்நிர் மனுதாரர்கள்/8 முதல் 13 பிரதிவாதிகளை, 8 முதல் 13 பிரதிவாதியாக சேர்க்கவேண்டி இந்நிர் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினை அனுமதிப்பது

குறித்து பரிசீலனை செய்கையில், இந்த மனுவானது கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், அசல் வழக்கானது எழுவினை வனைவதற்காக நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்நிலையில், மனுதாரர்கள்/8 முதல் 13 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகளுக்கு வழக்கு சம்பந்தப்பட்ட புல எண்.61/1ல் பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொண்டும் அதனடிப்படையில் இந்நிர் இடையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள்/8 முதல் 13 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டும் என்று கூறியுள்ளதை கருத்தில்கொண்டும், மேற்படி சர்வே எண்.61/1 என்பது அசல் வழக்கின் 3வது இலக்கச்சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், அசல் வழக்கானது சாட்சி விசாரணை செய்யப்படாமல் எழுவினா வனைவதற்காக நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி மனுதாரர்கள்/8 முதல் 13 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் எதிர்மனுதார்களாக சேர்ப்பதால் அசல் வழக்கின் ஒரு முழுமையான தீர்வுக்கு கொண்டு வருவதற்கும், வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை முழுமையாக

தீர்ப்பதற்கு இம்மனுவினை அனுமதிப்பது ஒரு காரணியாக அமையுமே தவிர இம்மனுவினை அனுமதிப்பதினால் தரப்பினர்கள் யாருக்கும் எவ்வித சாதக பாதகமும் இருக்காது என்பதை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்நிர் இடையீட்டு மனுவானது அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 28.04.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.28 16:39:49 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு** : –

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.28 16:39:55 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடை நிலை மனு எண்.26/2024
இன்
அசல் வழக்கு எண்.51/2014
செவ்வை – உத்தரவு
நாள்: 28.04.2026